## DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 171-2024 (156/2020) |
| Deposition of witness for | Prosecution : LW 12 - PW 4 |
| | Defence : |
| | Court : |
| Name : ராம்குமார் | Father's Name: வேணுகோபால் |
| | Husband Name: |
| Village : | Taluk : |
| | Calling : மோட்டார் வாகன ஆய்வாளர், மயிலாடுதுறை |
| | Age : 56 |
| | email : venuram.1970@gmail.com |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.01.2026

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு **317** ன் கீழ் மனு செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

முதல் விசாரணை :

நான் தற்போது மயிலாடு துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்த போது கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் வேண்டுகோளின்படி குற்ற எண். 367/2017, சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச. வழக்கில் சம்மந்தப்பட்ட TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை 08.08.2017 அன்று மதியம் 02.00 மணிக்கு அலுவலகம் அருகில் வைத்து வாகனத்தை ஆய்வு செய்தேன். அதில் வாகனப்பதிவேடுகள் சரியாக இருந்தன. வாகனத்தில் புதிதாக சேதங்கள் ஏதும் தென்படவில்லை. வாகன கால் நிறுத்தி மற்றும் கைநிறுத்தி சரியாக இருந்தன. டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. இந்த

விபத்து இவ்வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாரின் காரணமாகவும் ஏற்படவில்லை என்று கருத்துக்கூறி விபத்து ஆய்வு அறிக்கை வழங்கினேன். அந்த விபத்து ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

மேற்படி வாகனத்தை நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வைத்து ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை 2 நாட்கள் காலதாமதமாகத்தான் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் எவ்வித இயந்திரக் கோளாறு மற்றும் சேதாரம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

(மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் சாட்சியம் காணொளி காட்சியின் மூலம் பதிவு செய்யப்பட்டது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்